**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
**------**
**அசல் வழக்கு எண்.2/2021**

**2025 ஆம்** வருடம் செப்டம்பர் மாதம் 02 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.3-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குப்புசாமி | ஜாதி | : | |
| த.பெ | : | ராஜீ | தொழில் | : | நோட்டரி பப்ளிக் மற்றும் வழக்கறிஞர் |
| கிராமம் | : | திண்டுக்கல் | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் மாவட்டம் | வயது | : | 64/2025 |
| தேதி | : | 02.09.2025 | | | |

இடைக்கால மனு எண்.1/2025 dated 08.08.2025 மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி அழைப்பாணையின் பேரில் சாட்சி இன்று தானாக முன் வந்து சாட்சியம் அளிக்கிறார்.

வாதி தரப்பு முதல் **விசாரணை**

நான் கடந்த 39 வருடங்களாக வழக்கறிஞராகவும் கடந்த 29 வருடங்களாக நோட்டரி பப்ளிக்காகவும் பணிபுரிந்து வருகிறேன். என்னுடைய அலுவலகம் திண்டுக்கல் பஸ் நிலையம் அருகில் பாலாஜிபவன் ஹோட்டல் ஒட்டியுள்ள பிரியா காம்ப்ளக்சில் கடந்த 30 வருடங்களாக நான் என்னுடைய அலுவலகத்தினை நடத்தி வருகிறேன். என்னிடம் காட்டப்படும் உயிலானது ஜெர்மன் என்பவர் ஜெரால்டு செல்வநாதன் என்பவருக்கு எழுதப்பட்ட உயிலாகும் . அந்த உயிலை நோட்டரி பப்ளிக் என்ற முறையில் நான் சான்றொப்பம் செய்துள்ளேன். என் அலுவலகத்தில் வைத்து தான் என்னிடம் காட்டப்பட்ட உயிலில் ஜெர்மன் கையொப்பம் செய்தார். அந்த உயிலில் சாட்சி கையொப்பத்தை முதலாவதாக பஞ்சம்பட்டியை சேர்ந்த பாஜ்கர் என்பவர் கையொப்பம் செய்தார். 2 ஆவது சாட்சியாக திண்டுக்கல்லை சேர்ந்த அசோக் குமார் மனைவி S. செல்லம் என்பவர் கையெழுத்து செய்துள்ளார்.உயிலில் உள்ள போட்டோவின் மீது நான் தான் முத்திரை வைத்தேன். அந்த போட்டோவை நான் தான் ஒட்டினேன். அந்த போட்டோ ஜெர்மன் என்பவரது போட்டோ ஆகும். மேற்படி உயிலானது 02.02.2010 அன்று கையொப்பம் இடப்பட்டது . அது சம்மந்தமாக என்னுடைய அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பதிவேட்டில் போட்டோ ஒட்டி ஜெர்மன், பாஸ்கர், செல்லம் ஆகியோரது கையொப்பத்தை பெற்றுள்ளேன். என்னுடைய அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பதிவேட்டில் உள்ள இந்த உயில்தாரர்கள் மற்றும் சாட்சி கையொப்பம் உள்ள பகுதியை (பக்கம் 9) அசலுடன் ஒப்பிடப்பட்ட நகலை நீதிமன்றத்தில் நான் சமர்ப்பிக்கிறேன் அந்த ஆவணம் ஆ.சா.ஆ.22 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**10,11 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நீங்கள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.22 ஆவணத்தின் அசல் நீங்கள் பராமரிக்கும் நோட்டு என்றால் சரிதான். பொதுவாக மேற்சொன்ன நோட்டை நீங்கள் மட்டும் தான் எழுதுவீர்களா என்றால் இல்லை சில நேரங்களில் என் அலுவலகத்தில் வேலை பார்க்கும் சிலர் எழுதலாம் அல்லது

தரப்பினர்களே கூட எழுதலாம். ஜெர்மன் என்பவரை எப்படி உங்களுக்கு தெரியும் என்றால்எனக்கு முன்பு அறிமுகம் இல்லை அவர் தான் என் அலுவலகத்திற்கு தேடி வந்தார். ஜெர்மன் எந்த ஊர்க்காரர் என்றும் என்ன வேலை செய்கிறார் என்றும் தெரிந்து கொண்டீர்களா என்றால் அந்த உயிலில் உள்ள வாசகங்களை படித்து பார்த்து தெரிந்து கொண்டேன். இவ்வழக்கின் உயிலை யார் எழுதியது என்றால் ஜெர்மன் என்பவர் அவரே எழுதியதாக என்னிடம் சொன்னார். இவ்உயிலின் சாட்சிகளை யார் கூட்டி வந்தார்கள் என்றால் ஜெர்மன் என்பவரே உயிலின் சாட்சிகளை அழைத்து வந்தார். நீங்கள் சாட்சிகளை விசாரித்தீர்களா என்றால் விசாரித்தேன். ஒருவர் பஞ்சம்பட்டியை சேர்ந்த பாஸ்கர் என்று சொன்னார். மற்றொருவர் எனக்கு ஏற்கனவே முன்பு நன்கு தெரிந்த வழக்கறிஞர் அசோக் குமார் அவர்களுடைய மனைவி  செல்லம் என்று சொல்லி அறிமுகப்படுத்திக் கொண்டார். மேற்படி சாட்சி செல்லம் எந்த முகவரியில் இருப்பதாக சொன்னார் என்றால் உயிலில் உள்ள  அவருடைய முகவரியில் இருப்பதாக சொன்னார். உயிலின் 2 ஆவது சாட்சி செல்லம் பஞ்சம்பட்டியில் 35 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உயிலை எழுதுவதற்கு முத்திரை தாள்கள் தேவையா என்றால் தேவையில்லை. ஆனால் இவ்வழக்கின் உயில் முத்திரை தாளில் எழுதப்பட்டுள்ளது என்றால் அவர்கள் தான் எழுதிக் கொண்டு வந்தார்கள். உயிலில் ஜெர்மன் எத்தனை கையொப்பம் செய்தார் என்றால் 5 கையொப்பம் செய்தார். அன்றைய தினமே என் அலுவலகத்தில்உள்ள நோட்டில் ஒரு கையெழுத்து செய்தார். மொத்தம் ஆறு கையெழுத்து ஆகும். மொத்தம் எத்தமை கைரேகை வாங்கினீர்கள் என்றால் நோட்டில் ஒரு கைரேகையும் உயிலில் ஒரு கைரேகையும் வாங்கினேன். உயில் அனைத்து பக்கங்களிலும் கைரேகை இல்லை என்றால் சரிதான் நான் கடைசி பக்கத்தில் மட்டும் தான் கைரேகை வாங்கும் பழக்கம் ஆகும்.  உங்களுடைய அலுவலக நோட்டில் 2 ஆவது சாட்சி அவருடைய முகவரியை அவரே எழுதி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். உங்களிடம் காட்டப்படும் உயிலில் முதலாவது சாட்சி பாஸ்கரின் முகவரி யார் எழுதியது என்றால் பாஸ்கர்  தான் எழுதிக் கையொப்பம் செய்தார்.உங்களிடம் காட்டப்படும் உயிலில் இரண்டாவது  சாட்சி செல்லம் என்பவரின் முகவரியை  யார் எழுதியது என்றால் செல்லம்  தான் எழுதிக் கையொப்பம் செய்தார். ஜெர்மன் என்பவருடைய அடையாள அட்டை எதுவும் இவ்வழக்கின் உயிலுடன் இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். பொதுவாக நான் ஆவணத்தை பார்த்து தான் கையொப்பம் செய்வேன். உயிலில் சாட்சி கையொப்பம் செய்துள்ள நபர்களின் அடையாள அட்டை எதுவும் இவ்வழக்கின் உயிலுடன் இணைக்கப்பட்வில்லை என்றால் சரிதான். ஆனால் நான் பார்த்து விட்டு தான் கையொப்பம் செய்வேன். உயிலில் ஒட்டப்பட்டுள்ள போட்டோவின் மேல் ஜெர்மன் என்பவர் கையொப்பம் செய்துள்ளாரா என்றால் இல்லை ஆனால் அதற்கு கீழ் கைரேகை பெற்றுள்ளேன். உயிலில் சாட்சிக் கெயொப்பம் செய்துள்ள நபர்களின் புகைப்படங்களை ஒட்டவில்லை என்றால் சரிதான். உயிலில் ஆவண எழுத்தர் யார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஜெர்மன் என்பவர் இந்த உயிலை அவர் கைப்பட எ ழுதியதாக உயிலில் வாசகங்கள் இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் உயில் ஜெர்மன் என்பவரால் எழுதப்பட்ட ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. என்னிடம் அவ்வாறு தான் ஜெர்மன் என்பவர் சொன்னார். உயில் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஜெரால்டு செல்வநாதன் என்பவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் அலுவலகத்தில் உள்ளதாக சொல்லும் நோட்டில் உள்ள கையொப்பங்களும் ஜெர்மன் மற்றும் சாட்சிகளின் கையொப்பங்கள் கிடையாது என்றால் சரியல்ல. உயிலில் உள்ள ஜெர்மன் மற்றும் சாட்சிகளின்  கையொப்பங்கள் அவர்களுடையது அல்ல என்றும் நீங்களாகவே உற்பத்தி செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உயிலில் உள்ள கைரேகையும் உங்கள் அலுவலகத்தின் நோட்டின் உள்ள கைரேகையும் ஜெர்மன் என்பவருடைய கைரேகை இல்லை என்றால் சரியல்ல. உயிலில் உள்ள சங்கதிகளை சாட்சிகளிடம் சொன்னீர்களா என்றால் அனைவர் முன்னிலையிலும் நான் உயிலை படித்துக் காட்டிதான் கையொப்பம் பெறுவேன். உயிலில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களின் ஆவணங்களை பார்த்தீர்களா என்றால் பார்த்து விட்டு தான் கையொப்பம் செய்வேன். உங்களிடம் காட்டப்பட்டதாக சொல்லும் ஆவணங்களில் உள்ள சொத்து விவரத்தை மட்டும் பார்த்து விட்டு கையொப்பம் செய்தீர்களா அல்லது ஜெர்மன் அவர்களுக்கு உயிலில் சொல்லப்பட்டுள்ள சொத்தில் உரிமை உள்ளது என்று ஆவணங்களை பார்த்து முடிவு செய்த பிறகு

கையொப்பம் செய்தீர்களா என்றால் ஆவணங்களில் உள்ள சொத்து விவரத்தை மட்டும் பார்த்து விட்டு கையொப்பம் செய்வேன்.

**மறுவிசாரணை**

உங்களிடம் காட்டப்படும் உயிலின் கடைசி பக்கத்தில் சுகஸ்தலிகிதம் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**Sd/-Thiru. S. Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor